கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.க.இரவி.

ந.க.அ4/9055/2019 நாள்:04.07.2024

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - கடலூர் மாவட்ட வருவாய் அலகு - திருமதி.ர.சுதா க/பெ காலஞ்சென்ற திரு.ரங்கராகவன் - கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியை வரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் தொடங்கியும் ஆணையிடுதல் - தொடர்பாக.

படிக்கப் பட்டவை:

1. இவ்வலுவலக கடிதம் ந.க.அ4/9055/2019, நாள்.26.12.2020.
2. அரசாணை (3டி) எண்.16, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்.20.05.2024.
3. அரசுத் துணைச் செயலாளர், சென்னை அவர்களின் கடித எண்.9674/பணி - 9(1) /2022-1, நாள்.20.05.2024.

********

**ஆணை:**

கடலூர் மாவட்ட வருவாய் அலகில், முன்னாள் படைவீரராகப் பணியாற்றி பணியிடையே 11.03.2016 அன்று காலஞ்சென்ற திரு.ரங்கராகவன் என்பவரின் மனைவி திருமதி.ர.சுதா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் கடலூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, தனியர் 29.01.2020 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் முறையாக பணி வரன்முறை செய்ய ஆணை வேண்டி வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு மேலே பார்வை 1-இல் படிக்கப்பட்ட கடிதத்தில் முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டது.

2) பார்வை 3-இல் காணும் கடிதத்தின் மூலம் கருணை அடிப்படை பணி நியமனத்தை வரன்முறை செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளதை செயல்படுத்த முன்மொழிவில் அனுப்பப்பட்ட அசல் சான்றிதழ்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

3) பார்வை 2-இல் காணும் அரசாணையின்படி தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 29.01.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய

உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தகுதியுடையவராகிறார் என ஆணையிடப்பட்டுள்ளது.

4) எனவே, கடலூர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதிர.சுதா என்பவரை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாக கொண்டு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழ்கண்டவாறு பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் தொடங்கியும் ஆணையிடப்படுகிது.

| வ. எண் | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் | தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருமதி.ஆ.ர.சுதா,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்<br>வட்டாட்சியர் அலுவலகம்<br>(குடிமைப் பொருள்),<br>குறிஞ்சிப்பாடி. | 29.01.2020<br>மு.ப | 29.01.2020<br>மு.ப | 29.01.2020<br>மு.ப |

மேற்காணும் விவரம் குறித்து சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறு உரிய அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்./-க.இரவி,
மாவட்ட ஆட்சியருக்காக/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது), கடலூர்.

//உ ந உ ப.//

24.07.2024
அலுவலக மேலாளர்(பொது)

பெறுநர்

சம்பந்தப்பட்ட அலுவலர் ---உரிய அலுவலர் மூலமாக.

நகல்

1. வருவாய் வட்டாட்சியர், குறிஞ்சிப்பாடி.
2. கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை - 5.

24.11.24.
TAHSILDAR
KURINJIPADI